**செய்தி வெளியீடு எண்: 377** **நாள்: 25.06.2019**

**செய்தி வெளியீடு**

சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களின் தமிழ் தொண்டினைப் போற்றிடும் வகையில் அன்னாரின் பிறந்தநாள் அன்று அவரது திருவுருச் சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சிறப்பிக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 14.2.2019 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண். 110ன் கீழ் அறிவித்தார்கள். அதன்படி, ம.பொ. சிவஞானம் அவர்களின் பிறந்தநாள் இந்த ஆண்டு முதல், அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

ம.பொ. சிவஞானம் அவர்களின் 114ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு 26.6.2019 அன்று காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசால், தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், ‘சிலம்புச் செல்வர்’ ம.பொ. சிவஞானம் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 26ஆம் நாள், அரசு விழாவாகக் கொண்டாடப்படவுள்ளது.

இந்திய விடுதலைப் போராட்ட வீரரும், சிறந்த தமிழ் அறிஞரும், சிலப்பதிகாரத்தின் மீது ஆளுமை கொண்டிருந்ததால் ‘சிலம்புச் செல்வர்’ என அனைவராலும் அறியப்பட்டவர், முன்னாள் மேலவைத் தலைவர் திரு. ம.பொ. சிவஞானம் அவர்கள். மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம் அவர்கள், சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியிலுள்ள சால்வன்குப்பத்தில் 26.6.1906 அன்று பொன்னுசாமி – சிவகாமி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். குடும்பத்தின் ஏழ்மை நிலை காரணமாக ம.பொ.சி அவர்கள் மூன்றாம் வகுப்பிற்குமேல் பள்ளிப்படிப்பினைத் தொடர இயலாமல் குழந்தைப் பருவத்திலேயே நெசவு மற்றும் அச்சுக் கோர்க்கும் பணியினை செய்துவந்தார். பின்னர், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைவாசம் சென்றார். எழுநூறு நாட்களுக்கு மேல்

சிறையில் இருந்த ம.பொ.சி. அவர்கள் தன் சிறைவாசத்தை சிலப்பதிகாரத்தைக் கற்றுக்கொள்ள பயன்படுத்தினார். 1945ஆம் ஆண்டு ம.பொ.சி. அவர்கள் ‘தமிழ்முரசு’ எனும் இதழை துவக்கி நடத்திவந்தார்.

ம.பொ. சிவஞானம் அவர்கள், மெட்ராஸ் ஸ்டேட் என்பதை தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்ய தீவிரமாகப் போராடினார். மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது, அதனை எதிர்த்து ‘தலை கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்’ என முழக்கமிட்டுப் போராடி தமிழகத்தின் தலைநகராகச் சென்னை தொடர வேண்டும் என வலியுறுத்தினார். திருவேங்கடத்தை (திருப்பதி) தமிழகத்துடன் இணைக்கப் போராடி, அதில் வெற்றியடையாவிடினும், அப்போராட்டத்தின்மூலம் திருத்தணியை தமிழகத்திற்குப் பெற்றுத்தந்தார். மேலும், ம.பொ.சி அவர்களின் போராட்டத்தால் குமரியும் செங்கோட்டையும் தமிழகத்திற்கு கிடைத்தது. சிலம்புச்செல்வர் என அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்ட ம.பொ.சி அவர்கள் தனது 89ஆவது வயதில் 3.10.1995 அன்று இயற்கை எய்தினார்.

ம.பொ.சி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள ம.பொ.சி அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு 26.6.2019 அன்று காலை 10.00 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**